தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**5 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## அன்பால் உயர்வோம்

அன்பு உயிர்களின் உயரிய பண்பு. இது எல்லோரையும் உறவுகளாக இணைக்கும் உணர்வின் வெளிப்பாடு. தன்னையும் பிறரையும் நேசித்து, சிறப்பாக வாழ உதவுவது அன்பு ஆகும். எங்கும், எப்போதும் ஏற்றம் பெற வைப்பது அன்பு ஒன்றே!

அன்பின் வழியில் உயர்ந்தவர்கள் பலர். அவர்களுள் அன்னை தெரேசாவும் ஒருவர். தனக்கென வாழாது எமக்கென வாழ்ந்து காட்டியவர் தலைவர் மாமா. தாய்நாட்டின் மேல் வைத்த அன்பால் தங்கள் உயிரையே தந்தவர்கள் எங்கள் மாவீரர்கள்.

இவர்கள் எல்லாம் காட்டிய வழி அன்பு வழி. எனவே, நாமும் எங்கள் பெற்றவர்கள் மீதும், இனத்தின் மீதும், தாய்மண் மீதும் அன்பு செய்வோம். மற்றவர்கள் துன்பப்படுகின்ற வேளையிலே ஆறுதல் கூறுவோம். அன்பாலே மனங்களை வெல்வோம். அன்பைப் போற்றுவோம். அன்பால் உயர்வோம்.

நன்றி,

வணக்கம்.